முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1294

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.04.2023, சனிக்கிழமை

1. ஞானசுடரே அரங்கா வாழ்க
   ஞானிகளை படைக்க வந்த தேசிகா வாழ்க
   வானவர்கள் போற்றும் வள்ளலே வாழ்க
   வையகத்தை காக்கவந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க எனவாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞானஅறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 2ம், 15.04.2023 சனிக்கிழமை)
   தாழ்விலா அரங்கன் சன்மார்க்கமே
   தமிழகம்தொட்டு உலகமெல்லாம் பரவி
3. பரவியே இந்த உலகை அன்புள்ள தேசமாக
   பரோபகாரம் நிறைந்த புண்ணிய பூமியாக
   சரவணச்சுடரின் ஞான ஒளியிலே
   சகலருக்கும் இலகுவாய் ஞானம்கிட்டி
4. கிட்டியே இந்தபேருலகம் ஞானவான்கள் நிறைந்த
   குறையிலா ஞானபூமியாக மாறும்
   தட்டாது அரங்கனுக்கு வரங்கள் தனை
   தண்டாயுதன் யான் எக்கணமும் தொடர்ந்து வழங்கிவர
5. திட்டமிட்டு உலகோர் அரங்கன் தொடர்பை கூட்டி
   தேசமெங்கும் அரங்கன் புகழை நாட்டி
   நாட்டியே அரங்கனே முருகா என
   நாமஜெபம் பலம் எங்கும் முழங்கும்வண்ணம்
6. தட்டாது சேவையாற்றி வருதல்காண
   தரணியெங்கும் ஞானவான்கள்படை பெருகி
   பெருகியே அரங்கன் தேடல்வழி உள்ள மக்களெல்லாம்
   பிசகின்றி ஞானிகளாக மாற்றங்கண்டு

7. முருகப்பெருமான் என் ஆசிபெற்ற
முழுமையான ஞானவான்கள் ஆட்சி காலமாக
ஆகவே மாற்றம் சடுதிகாணும்
அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–